# சின்னமலை – ஐ.டி. பூங்கா மகிழுந்து சேவை நாளை முதல் தொடக்கம்

சென்னை, ஆக.24: சின்னமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து டைடல் பூங்கா, ராமானுஜம் தொழில்நுட்ப பூங்காவுக்கு குளிர்சாதன மகிழுந்து இணைப்பு சேவைகள் வரும் 26-ம் தேதி முதல் அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இது குறித்து மெட்ரோ ரயில் நிர்வாகம் சனிக்கிழமை வெளியிட்ட செய்தி:

சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில், மக்கள் பயன்பாட்டுக்கு பல போக்குவரத்து இணைப்பு சேவைகளான ஷேர் ஆட்டோ, கார், சிறிய பேருந்து சேவை வழங்கப்பட்டு வருகிறது. பயணிகள் தாங்கள் சேருமிடத்தை எளிதாகவும் விரைவாகவும் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அந்தவகையில், பழைய மகாபலிபுரம் சாலையில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களை இணைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, சின்னமலை மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து டைடல் பார்க் (தரமணி), ராமானுஜம் தொழில் பூங்காவுக்கு குளிர்சாதன மகிழுந்து இணைப்பு சேவைகள் வரும் 26 ஆம் தேதி அறிமுகப்படுத்தப்படுகின்றன. இதற்கான கட்டணம் ரூ.20 என நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதை பொதுமக்கள் பயன்படுத்தி பயன் பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.